**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081682

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 02/AC/2024 Date: நாள் 12.03.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 07.03.2024 at 16.15 hrs, 07.03.2024 at 16.30 hrs & 08.03.2024 at 12.45 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 12.03.2024 at 06.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் - Time : நேரம் -

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o the Assistant Engineer, O&M, TANGEDCO, Indur, Dharmapuri District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Vadivel
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ponnukan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41/2024
   (d) Nationality : நாட்டினம் Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் -
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் Business
   (g) Address : முகவரி No. 1/427, Attukaranpatty village, Sogathur (PO), Dharmapuri (Tk & Dt) - 636 809

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Sasikanth, Revenue Supervisor, O/o the Assistant Engineer, O&M, TANGEDCO, Indur, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P vaC (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 12/03/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.03.2024 at 09.20 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண்
V&AC,
DHARMAPURI

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

******

இன்று 12.03.2024-ஆம் தேதி காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், சோகத்தூர் அஞ்சல், ஆட்டுகாரம்பட்டி கிராமம், கதவு எண்.1/427 என்ற முகவரியைச் சேர்ந்த பொன்னுகான் மகன் திரு.P.வடிவேல் என்பவர் அலுவலகம் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், ஆட்டுகாரம்பட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தற்போது பெங்களூரில் டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் 9–ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஒரு வருடத்திற்கு முன் ஆட்டுகாரம்பட்டியில் எங்களது நிலத்தில் புதியதாக வீடு கட்ட ஆரம்பித்தேன். அப்போது வீடு கட்டுமானத்திற்கு தற்காலிக வீட்டு மின் இணைப்பு வேண்டி, 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இண்டூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து, தற்காலிக மின் இணைப்பு பெற்று மூன்று மாதத்திற்கு முன்பு வீடு கட்டி முடித்து, தற்போது அந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். அந்த மின் இணைப்பு எண்.1689. அந்த தற்காலிக மின் இணைப்பை நிரந்தர வீட்டு மின் இணைப்பாக மாற்ற வேண்டி, மற்றொரு விண்ணப்பம் பூர்த்தி செய்து போட்டோ ஒட்டி அத்துடன் ஆதார் கார்டு நகல் இணைத்து எடுத்துக் கொண்டு, கடந்த 07.03.2024 – ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நானும், எனது தாய் மாமா மணியும் இண்டூர் உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்றோம். அப்போது அந்த அலுவலகத்திலிருந்த வருவாய் மேற்பார்வையாளர் சசிகாந்த், நான் வைத்திருந்த விண்ணப்பத்தை வாங்கி பார்த்துவிட்டு, தானே நடவடிக்கை எடுப்பதாக கூறி, நீங்கள் வீட்டிற்கு போங்க, நான் சாயங்காலம் உங்க வீட்டிற்கு வருகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். பிறகு அன்று மாலை சுமார் 04.15 மணிக்கு வருவாய் மேற்பார்வையாளர் சசிகாந்த் ஆட்டுகாரம்பட்டியில் உள்ள எங்களது வீட்டிற்கு வந்து, மின் மீட்டரை ஆய்வு செய்துவிட்டு, தற்காலிக வீட்டு மின் இணைப்பை நிரந்தர வீட்டு மின் இணைப்பாக மாற்ற தனக்கு தனியாக ரூ.20,000/– கொடுத்தால் உடனடியாக வேலையை முடித்து தருவதாக சொன்னார். அதற்கு நான் அவரிடம், சார் இப்பதான் நிறைய கடன் வாங்கி வீடு கட்டியுள்ளேன். அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் வேலை ஆகனும்னா செலவு பண்ணி தான் ஆகனும் என்றும், சும்மா எதுவும் கிடைக்காது என்றார். அதற்கு நான், சார் கொஞ்சம் குறைச்சி சொல்லுங்க என்று கேட்டேன். அதற்கு அவர், தன் பின்னாடியே வருமாறு கூறி,

அவரது பைக்கில், ஆட்டுக்காரம்பட்டி பஸ் நிறுத்தம் அருகே உள்ள ஜீவா எலக்ட்ரிகல்ஸ் கடைக்கு சென்று, அங்கு சேரில் அமர்ந்துக் கொண்டார். நானும், எனது பைக்கில் அவர் பின்னாடியே சென்று ஜீவா எலக்ட்ரிகல்ஸ் கடைக்கு அருகே பைக்கை நிறுத்திவிட்டு, அந்த கடைக்கு சற்று தள்ளி எனது மாமா மணி அவர்கள் வைத்துள்ள பேக்கரிக்கு சென்று, எனது மாமா மணி அவர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு, ஜீவா எலக்ட்ரிகல்ஸ் கடைக்கு சென்று அங்கு அமர்ந்திருந்த வருவாய் மேற்பார்வையாளர் சசிகாந்த் அவர்களை சந்தித்தோம். அப்போது மாலை சுமார் 04.30 மணியிருக்கும். நானும், எனது மாமா மணி அவர்களும், வருவாய் மேற்பார்வையாளர் சசிகாந்த் அவர்களிடம், அவர் கேட்ட பணம் ரூ.20,000/– மிகவும் அதிகம், கொஞ்சம் உதவி பண்ணுங்க என்று கேட்டோம். அதற்கு அவர், நிறைய செலவு இருக்கு, கேட்ட பணத்தை கொடுத்திடுங்க என்று சொல்லி சென்றுவிட்டார். பின்னர் அடுத்த நாள் 08.03.2024–ஆம் தேதி மதியம் சுமார் 13.45 மணிக்கு நான், இண்டூர் சென்று வருவாய் மேற்பார்வையாளர் சசிகாந்த் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, எனது வீட்டு மின் இணைப்பை மாற்றுவது குறித்து கேட்டேன். அப்போது அவர், தான் கேட்ட பணம் ரூ.20,000/– ரெடி பண்ணிட்டியா என்று என்னிடம் கேட்டார். என்னால் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்றும், கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்றும் கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர், சரி ரூ.5000/– குறைத்து ரூ.15,000/– கொடுத்துவிடு, இல்லையென்றால் உனது வேலையாகாது என்று முடிவாக சொல்லிவிட்டார். எப்ப வேண்டுமானாலும் அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்து, அவர் கேட்ட பணம் ரூ.15,000/– கொடுக்குமாறு கூறி, என்னை அனுப்பிவிட்டார். வருவாய் மேற்பார்வையாளர், சசிகாந்த் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/–த்தை கொடுத்து, எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணத்தை உடனே என்னால ரெடி பண்ண முடியவில்லை. உறவினர் மூலம் நேற்று 11.03.2024–ஆம் தேதி தான் ரெடிபண்ண முடிந்தது. அதனால் இன்று 12.03.2024–ந்தேதி செவ்வாய்க்கிழமை அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/–த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். இண்டூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்தில் வருவாய் மேற்பார்வையாளராக பணிபுரியும் சசிகாந்த் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் திரு.P.Vadivel, 12.03.2024. Sir, Received the written report on 12.03.2024 at 06.00hrs and further, after making a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a

case in Dharmapuri V&AC, Cr.No.02/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 12.03.2024 at 06.30hrs against the accused. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

12/03/2024

**(G.PERUMAL)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.